# இந்திய உயர் ஸ்தானிகராலயம்
# கொழும்பு

## ஊடக அறிக்கை

## <u>இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தை கொண்டாடிய இலங்கை - இந்திய சங்கம்</u>

இந்தியாவின் 79 ஆவது சுதந்திர தினத்தை குறிக்கும் முகமாக இலங்கை இந்திய சங்கத்தினரால் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த வருடாந்த இராப்போஷன விருந்துபசாரத்தில் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கௌரவ சந்தோஷ் ஜா அவர்கள் கலந்துகொண்டு சிறப்பித்திருந்தார். 2025 செப்டம்பர் 15 ஆம் திகதி நடைபெற்ற இந்த நிகழ்வில் கௌரவ சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ அவர்களும் பங்கேற்றிருந்தார். இந்திய-இலங்கை வர்த்தக சமூகம், ஊடக நிறுவனங்கள், முதலீட்டாளர்கள், பிரதம நிறைவேற்று அதிகாரிகள், இலங்கை இந்திய சங்கத்தின் தலைவர் திருமதி ஜமுனா கணேசலிங்கம் தலைமையிலான சங்க உறுப்பினர்கள் உட்பட பலர் இந்நிகழ்வில் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

2. இந்நிகழ்வில் உரைநிகழ்த்திய உயர் ஸ்தானிகர் அவர்கள் 2024 டிசம்பரில் இலங்கை ஜனாதிபதி மேன்மை தாங்கிய அநுர குமார திசாநாயக்கா அவர்கள் இந்தியாவிற்கு மேற்கொண்டிருந்த விஜயம் மற்றும் இந்திய பிரதமர் ஸ்ரீ நரேந்திர மோடி அவர்கள் 2025 ஏப்ரலில் இலங்கைக்கு மேற்கொண்டிருந்த விஜயம் ஆகியவற்றினை நினைவூட்டி, இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான உறவுகள் வரலாற்று ரீதியில் மிகவும் உயர்வான நிலையில் காணப்படுவதாக குறிப்பிட்டார். இந்த விஜயங்கள் மூலம் 7 புரிந்துணர்வு உடன்படிக்கைகள், புதிய திட்டங்கள் மற்றும் தொடர்புகள், சக்தி பாதுகாப்பு, டிஜிட்டல் பரிமாற்றங்கள், ஆளுமை விருத்தி மற்றும் பிராந்திய ஸ்திரத்தன்மை உள்ளிட்ட முக்கிய துறைகளின் முன்னேற்றத்துக்கு வழிவகுத்தன. இந்தியாவும் இலங்கையும் இயற்கையான பங்காளர்களாகவும், நாகரீக இரட்டையர்களாகவும் இருப்பதாக குறிப்பிட்ட உயர் ஸ்தானிகர், உரிய தருணங்களில் இந்தியா இலங்கைக்கு வழங்கிய ஆதரவுகள் அயலுறவுக்கு முதலிடம் கொள்கை மற்றும் மகாசாகர் கோட்பாடு ஆகியவற்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டவை எனவும் தெரிவித்தார்.

3. இந்தியா தற்போது வேகமாக வளர்ந்து வரும் பாரிய பொருளாதார நாடாக காணப்படுவதுடன் 2038 ஆம் ஆண்டில் உலகின் இரண்டாவது பாரிய பொருளாதாரமாக மாற்றமடையும் என எதிர்பார்க்கப்படுவதாக இச்சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட உயர் ஸ்தானிகர், ஏற்றுமதிகள், விநியோக மார்க்கங்கள் மற்றும் முதலீட்டுக்கான மூலாதாரம் உள்ளிட்ட பல்வேறு நலன்களையும் இந்தியாவின் இந்த வளர்ச்சியிலிருந்து இலங்கை பெற்றுக் கொள்ளவேண்டும் எனவும் அழைப்பு விடுத்தார். இலங்கையில் தற்போது 7 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான அபிவிருத்தி திட்டங்களை இந்தியா மேற்கொண்டதாக அவர் உறுதிப்படுத்தியதுடன், இத்திட்டங்களில் 800 மில்லியன் அமெரிக்க டொலர் பெறுமதியான நன்கொடை திட்டங்கள் நாட்டின் 25 மாவட்டங்களையும் உள்ளடக்கி வீடமைப்பு, சுகாதாரம், ரயில்வே கல்வி, டிஜிட்டல்மயமாதல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்தி ஆகிய பல்வேறு துறைகளில் முன்னெடுக்கப்பட்டதாகவும் தெரிவித்தார்.

4. இதேவேளை, இந்நிகழ்வில் உரை நிகழ்த்தியிருந்த கௌரவ அமைச்சர் டாக்டர் நளிந்த ஜெயதிஸ்ஸ அவர்கள் இந்தியாவின் வேகமான பொருளாதார வளர்ச்சி தொடர்பில் ஆவலுடன் இருக்கும் இலங்கை இவ்விடயம் குறித்து பெருமிதம் கொள்வதாக குறிப்பிட்டார். அத்துடன் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அமைதி மற்றும் ஸ்திரத்தன்மையை உறுதி செய்வதற்கு அயராது பாடுபடுகின்ற அதேவேளை உலகின் மூன்றாவது பெரிய பொருளாதார நாடாக மாறுவதற்கான பாதையில் செல்லும் ஒரு நாட்டுடன் நெருக்கமான உறவைப் பேணும் நாடாக அதன் மூலமான வாய்ப்புகளைப் பயன்படுத்திக் கொள்ள இலங்கை அரசாங்கம் முயல்கிறது என்றும் அவர் தெரிவித்தார். மேலும், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்கள் உற்பத்தி உள்ளிட்ட துறைகளில் இலங்கையில் முதலீடு செய்ய முன்வருமாறும் இந்திய நிறுவனங்களுக்கு அவர் அழைப்பு விடுத்துள்ளார். இரு நாடுகளுக்கும் இடையிலான சமூக மற்றும் கலாசார உறவுகளை வலுப்படுத்துவதிலும் மேம்படுத்துவதிலும் இலங்கை-இந்திய சங்கம் நிறுவப்பட்டதிலிருந்து வழங்கிவரும் பங்களிப்பையும் அவர் மெச்சியிருந்தார்.

5. 1949 ஆம் ஆண்டில் ஸ்தாபிக்கக்கப்பட்ட இலங்கை இந்திய சங்கம், இரு நாடுகளுக்கும் இடையிலான பழமையான நட்புறவு சங்கமாகும், அத்துடன் மக்களிடையேயான உறவுகளை வலுவாக்குவதிலும் பரஸ்பர புரிந்துணர்வை ஊக்குவிப்பதிலும் தொடர்ந்து முக்கிய பங்கு வகித்துவருகின்றது.

************

**கொழும்பு**
**18 செப்டெம்பர் 2025**